பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 01 2025 **SATURDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கிராமப்புற இந்தியாவை புதிய ஆற்றலுடன் மிளிரச் செய்ய வேண்டும் என்ற நோக்கில், அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் பிரபல அணுசக்தி விஞ்ஞானி டாக்டர் ஆர் சிதம்பரம் இன்று மும்பையில் காலமானார்.

3. மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த மண்டல மையத்தை மத்திய அமைச்சர் திரு வீரேந்திர குமார் மதுரையில் இன்று திறந்துவைத்தார்.

4. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இம்மாதம் 17-ஆம் தேதி தமிழக அரசு கூடுதல் விடுமுறை அறிவித்துள்ளது.

5. இந்தூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Parikshit Somani – Dhakshineswar Suresh** இணை பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

**<<<<<<>>>>>**

கிராமப்புற இந்தியாவை புதிய ஆற்றலுடன் மிளிரச் செய்ய வேண்டும் என்ற நோக்கில், அரசின் கொள்கைகளும், திட்டங்களும் வகுக்கப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இன்று கிராமப்புற பாரத மகோத்சவத்தை தொடங்கிவைத்து பேசிய பிரதமர், வளர்ச்சி மற்றும் புதிய வாய்ப்புகளை வழங்கும் மையமாக கிராமப்புறங்களை மாற்ற வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, மத்தியில் பொறுப்பேற்றதிலிருந்து கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளித்துவருவதாகவும், அங்குள்ள மக்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கிலும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் அடிப்படை தேவைகளை உறுதி செய்வதற்கான இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியதாக தெரிவித்த பிரதமர், கிராமப்புறங்கள் தன்னிறைவு பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கூறினார்.

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தின்கீழ், மூன்று லட்சம் கோடி ரூபாய் இதுவரை வழங்கப்பட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் விவசாயத்திற்கான கடன்கள் மூன்றரை மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், விவசாய விளைப்பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையும் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கென்று தூய்மை இந்தியா இயக்கம், அனைவருக்கும் வீட்டுவசதித்திட்டம், ஜல் ஜீவன் நீர் ஆதாரத்திட்டம், உள்ளிட்டவை செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டின் அணு ஆயுத திட்டங்களில் நீண்டகாலம் முக்கிய பங்காற்றிய விஞ்ஞானி டாக்டர் ஆர் சிதம்பரம் இன்று மும்பையில் காலமானார். அவருக்கு வயது 88.

வயது மூப்பு மற்றும் உடல்நலம் குன்றியதால் சிறிது காலம் மும்பை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் இன்று காலை உயிரிழந்தார்.

1974 மற்றும் 1998-ஆம் ஆண்டுகளில் பொக்ரானில் நடத்தப்பட்ட அணு ஆயுத சோதனை திட்டங்களை டாக்டர் ராஜகோபால சிதம்பரம் முன்நின்று நடத்தியவர்.

மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகராகவும், பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் தலைவராகவும், அணுசக்தி கமிஷனின் தலைவராகவும் முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார்.

பத்மவிபூஷன், பத்மஸ்ரீ ஆகிய விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

அணு விஞ்ஞானி டாக்டர் ஆர் சிதம்பரம் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில், இந்தியாவின் அணுசக்தி திட்டங்களை உருவாக்கிய சிற்பி என்று அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டின் அறிவியல் தொழில்நுட்பத்திறனை வலுப்படுத்துவதற்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலை நாட்ட மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த மண்டல மையத்தை திறந்துவைத்து பேசிய அவர், மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக தரமான சேவைகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் நோக்கில், இந்த மையம் அமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் இதேபோன்று, 25 மண்டல மையங்கள் செயல்பட்டு வருவதாக கூறிய அவர், மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு, கல்வி, திறன் மேம்பாடு, சமூக ஒருமைப்பாடு உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகளை இது வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

மதுரையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மண்டல மையம் அமைக்கப்பட்டுள்ளதையடுத்து, அவர்களுக்கான சேவை தங்கள் வீடுகளுக்கு அருகிலேயே கிடைப்பதற்கு வழிபிறந்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த மையம் சிறப்பாக செயல்படுவதற்கு மாநில அரசு அதிகாரிகள், பொதுமக்கள், உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் திரு வீரேந்திர குமார் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

விருதுநகர் மாவட்டம் கோட்டையூரில் இன்று காலை பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பட்டாசு தொழிற்சாலை வெடிவிபத்து என்ற செய்தியை கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்ததாக கூறியுள்ளார்.

காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, பட்டாசு ஆலைகளில் பாதுகாப்பு நெறிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பட்டாசு ஆலை பாதுகாப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் மாநில அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை, அனைத்து பட்டாசு ஆலைகளிலும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து மாநில அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பட்டாசு ஆலை தொழிலார்ளகளுக்கு உரிய பாதுகாப்பை மாநில அரசு அளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பட்டாசு ஆலை வெடிவிபத்து பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, இம்மாதம் 17-ஆம் தேதி மாநில அரசு கூடுதல் விடுமுறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக்குறிப்பில், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் மக்கள் கொண்டாடும் வகையில், இம்மாதம் 17-ஆம் தேதி கூடுதல் விடுமுறை அளிக்க அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை அளிக்கப்படுவதாகவும், இதனை ஈடு செய்யும் வகையில், இம்மாதம் 25-ஆம் தேதி சனிக்கிழமை பணி நாளாக இருக்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் நடப்பாண்டில் ஆயிரத்து 235 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம், 5 லட்சத்து 50 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு சக்ரபாணி தெரிவித்துள்ளார்.

ஈரோடு அருகே வேப்பம்பாளையத்தில் அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், 75 ஆயிரம் விவசாயிகளுக்கு நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக ஆயிரத்து 580 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கைரேகை அடிப்படையிலான ரேஷன் கார்டுகளில் சில சிக்கல்கள் உள்ளதாக தெரிவித்த அமைச்சர், அதனை களையும் வகையில், கருவிழி அடையாள கருவிகளை பயன்படுத்தி, ரேஷன் பொருட்களை விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார்.

சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் தருமபுரி, உதகமண்டலம் உள்ளிட்ட பகுதிகளில் நியாயவிலைக்கடைகள் மூலம் கேழ்வரகு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் திரு சக்ரபாணி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

அரியலூரில் கூட்டுறவுத்துறை மூலம், மலிவு விலை சிறப்பு பொங்கல் தொகுப்புத்திட்டத்தை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

கடலூர் மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் கரும்பின் தரம் மற்றும் அதன் அளவு குறித்து ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

---------------

கோவையில் காதி மற்றும் கிராமத்தொழில்கள் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற மெகா **Fashion Show** நிகழ்ச்சியில், அதன் தலைவர் திரு மனோஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

---------------

காஞ்சிபுரம் மாவட்டம் வையாவூரில் மிதிவண்டி போட்டியை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தொடங்கிவைத்தார்.

--------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் வெற்றிபெற்ற முதல் பத்து பேருக்கு ரொக்கம் மற்றும் சான்றிதழ்களை ஆட்சியர் திரு மகாபாரதி வழங்கினார்.

----------------

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியிலிருந்து, கேரள மாநிலம் வைக்கம் பகுதிக்கு விரைவு பேருந்து சேவை இன்று தொடங்கப்பட்டுள்ளது.

---------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் கல்லூரி வளாகத்தில், மாணவர்கள் பசுமை பொங்கலை கொண்டாடினார்.

------------------

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி மார்கழி திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தூரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Parikshit Somani – Dhakshineswar Suresh** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில், பிரான்சின் **Mathys Erhard -** இங்கிலாந்தின் **Alastair Gray** இணை காயம் காரணமாக வெளியேறியதையடுத்து, இந்திய இணை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

------------

ஆக்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின், தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------

சிட்னியில் நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா 2-வது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்சில் 185 ரன்னுக்கும், ஆஸ்திரேலியா 181 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

**<<<<<<END>>>>>**